# 99 ஸ்பீட்மார்ட் வர்த்தக மையத்தின்

## மலேசிய பொருட்களை வாங்குவோம் இயக்கம்



மலேசிய பொருட்களை வாங்குவோம் இயக்கத்தை தொடக்கி வைக்கும் அமைச்சர் சலாஹுடின், தலைமைச் செயலாளர் மற்றும் 99 ஸ்பீட்மார்ட் உரிமையாளர் லீ தியாம் வா.



நன்கொடை பெற்றவர்கள்

கோலாலம்பூர், டிச. 15- நாட்டின் முன்னணி வர்த்தக மையங்களில் ஒன்றான 99 ஸ்பீட்மார்ட் அதன் 35 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை மலேசியப் பொருட்களை வாங்குவோம் எனும் இயக்கத்தை தொடங்கியது.

இம்மாதம் டிசம்பர் 13 தொடங்கி 31 ஆம் தேதி வரையில் 50 வகையான உள்நாட்டுத் தயாரிப்புகளை இவ்வியக்கம் வாயிலாக தாங்கள் விற்கவிருப்பதாக 99 ஸ்பீட்மார்ட் ஓர் அறிக்கை வாயிலாக தெரிவித்துள்ளது.

இதனை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு விருந்து நிகழ்ச்சியில் உள்நாட்டு வர்த்தக, வாழ்வாதாரத் துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சலாஹுடின் அயூப் கலந்து கொண்டார்.

இதே நிகழ்ச்சியில் பேசிய அவ்வர்த்தக மையத்தின் நிர்வாக இயக்குநர் இங் லீ தியெங், 60 விழுக்காட்டிற்கும் மேலான தங்களின் வருமானம் மலேசிய தயாரிப்புகள் மூலமாகக் கிடைப்பதால் தங்கள் நிறுவனம் எப்போதும் உள்நாட்டு தயாரிப்புகளையே ஊக்குவித்து வரும் என கூறினார். இதன் வாயிலாக 2023 ஆம் நிதியாண்டில் 500 கோடி வெள்ளி விற்பனை இலக்கை அடையும் நம்பிக்கை தங்களுக்கு இருப்பதாகவும் உள்நாட்டு விநியோகஸ்தர்களின் ஆதரவுடன் இதனை தங்களால் அடைய முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, 99 ஸ்பீட்மார்ட் மட்டுமே அதன் கிளை வர்த்தக மையங்களில் 100 விழுக்காட்டு உள்நாட்டு தொழிலாளர்களுக்கு வாய்ப்பு வழங்கி வருகிறது என்ற தகவலை அமைச்சர் சலாஹுடின் தெரிவித்தார்.

இவ்விருந்து நிகழ்ச்சியின்போது 99 ஸ்பீட்மார்ட் பணியாளர்கள் பலரும் சிறப்பிக்கப்பட்டனர். மேலும், துங்கு அப்துல் ரஹ்மான் பல்கலைக்கழகத்திற்கு 10 லட்சம் வெள்ளியும், தேசிய இருதயக் கழக அறவாரியத்திற்கு வெ.500,000 மற்றும் மலேசிய வன ஆராய்ச்சிக் கழகத்திற்கு வெ.500,000 ஐயும் இந்நிறுவனம் நன்கொடையாக வழங்கியது.



99 ஸ்பீட்மார்ட் குடும்பத்தினர்